உ

சிவ சிவ

# திருஞானசம்பந்த சுவாமிகள்

*அருளிச்செய்த*
*தேவாரப்பதிகங்கள்*

# முதல் திருமுறை

## 1. திருப்பிரமபுரம்

தலமுறை வரிசை பதிக எண்: 1 பண் - நட்டபாடை

தோடு உடைய செவியன் விடை
ஏறி ஓர் தூ வெண்மதிசூடி
காடு உடைய சுடலைப் பொடி பூசி
என் உள்ளம் கவர் கள்வன்
ஏடு உடைய மலரால் முனைநாள்
பணிந்து ஏத்த அருள்செய்த
பீடு உடைய பிரமாபுரம் மேவிய
பெம்மான் இவன் அன்றே. 1

முற்றல் ஆமை இள நாகமொடு ஏனமுளைக்
கொம்பு அவைபூண்டு
வற்றல்ஓடு கலனாப் பலிதேர்ந்து எனது
உள்ளம் கவர் கள்வன்
கற்றல் கேட்டல் உடையார் பெரியார் கழல்
கையால் தொழுது ஏத்த
பெற்றம் ஊர்ந்த பிரமாபுரம் மேவிய
பெம்மான் இவன் அன்றே. 2

நீர் பரந்த நிமிர் புன்சடைமேல் ஓர்
நிலா வெண்மதிசூடி
ஏர் பரந்த இனவெள்வளை சோர என்
உள்ளம் கவர் கள்வன்

ஊர் பரந்த உலகின் முதல்ஆகிய
ஓர்ஊர் இது என்னப்
பேர்பரந்த பிரமாபுரம் மேவிய பெம்மான்
இவன் அன்றே. 3

விண் மகிழ்ந்த மதில் எய்ததும் அன்றி
விள்ங்கு தலை ஓட்டில்
உள் மகிழ்ந்துபலி தேரிய வந்து எனது
உள்ளம் கவர் கள்வன்
மண் மகிழ்ந்த அரவம் மலர்க்கொன்றை
மலிந்த வரை மார்பில்
பெண் மகிழ்ந்த பிரமாபுரம் மேவிய
பெம்மான் இவன் அன்றே. 4

ஒருமை பெண்மை உடையன் சடையன்
விடைஊரும் இவன்என்ன
அருமை ஆக உரைசெய்ய அமர்ந்து எனது
உள்ளம் கவர் கள்வன்
கருமை பெற்ற கடல் கொள்ள மிதந்தது ஓர்
காலம் இது என்னப்
பெருமை பெற்ற பிரமாபுரம் மேவிய
பெம்மான் இவன் அன்றே. 5

மறை கலந்த ஒலிபாடலோடு ஆடலர்
ஆகி மழு ஏந்தி
இறைகலந்த இனவெள்வளை சோர என்
உள்ளம் கவர் கள்வன்
கறைகலந்த கடி ஆர் பொழில் நீடுஉயர்
சோலை கதிர்சிந்தப்
பிறைகலந்த பிரமாபுரம் மேவிய
பெம்மான் இவன் அன்றே. 6

சடை முயங்கு புனலன் அனலன்
எரிவீசிச் சதிர்வு எய்த
உடை முயங்கும் அரவோடு உழிதந்து எனது
உள்ளம் கவர் கள்வன்
கடல் முயங்கு கழிசூழ் குளிர்கானல்
அம்பொன் அம்சிறகு அன்னம்
பெடை முயங்கு பிரமாபுரம் மேவிய
பெம்மான் இவன் அன்றே. 7

வியர் இலங்கு வரை உந்திய தோள்களை
வீரம் விளைவித்த
உயர் இலங்கை அரையன் வலி செற்று எனது
உள்ளம் கவர் கள்வன்
துயர் இலங்கும் உலகில் பலஊழிகள்
தோன்றும் பொழுது எல்லாம்
பெயர் இலங்கு பிரமாபுரம் மேவிய
பெம்மான் இவன் அன்றே. 8

தாள் நுதல் செய்து இறைகாணிய மாலொடு
தண் தாமரையானும்
நீணுதல் செய்து ஒழிய நிமிர்ந்தான் எனது
உள்ளம் கவர் கள்வன்
வாள்நுதல் செய் மகளீர் முதலாகிய
வையத்தவர் ஏத்த
பேணுதல்செய் பிரமாபுரம் மேவிய
பெம்மான் இவன் அன்றே. 9

புத்தரோடு பொறி இல் சமணும்
புறம்கூற நெறி நில்லா
ஒத்த சொல்ல உலகம் பலி தேர்ந்து எனது
உள்ளம் கவர் கள்வன்

மத்தயானை மறுக உரி போர்த்தது
ஓர்மாயம் இது என்ன
பித்தர்போலும் பிரமாபுரம் மேவிய
பெம்மான் இவன் அன்றே. 10

அருநெறிய மறைவல்ல முனி அகன்
பொய்கை அலர்மேய
பெருநெறிய பிரமாபுரம் மேவிய
பெம்மான் இவன் தன்னை
ஒரு நெறிய மனம் வைத்து உணர்
ஞானசம்பந்தன் உரைசெய்த
திரு நெறிய தமிழ் வல்லவர் தொல்வினை
தீர்தல் எளிதாமே. 11

சுவாமி: பிரமபுரீசுவரர் தேவி: திருநிலைநாயகி

*திருச்சிற்றம்பலம்*